# சந்திப்பு (2)

அழகான அந்தி மாலை நேரம்.
அமைதியாய் ஆற்றங்கரையில்
நடந்து கொண்டிருந்தேன்;

'என்ன, தனியாக அந்தப் பக்கம்'
என்ற குரல் கேட்டது;

யாரது என்று திரும்பிப் பார்த்தேன்;

'இதோ, இந்தப் பக்கம்' என்று
மீண்டும் அதே குரல்;
குரல் வந்த திசையைப் பார்த்தேன்;

'நான்தான்' என்றபடி
புன்னகை செய்தாள் நதிப்பெண்;

'ஓ, நீயா நதிப்பெண்ணே?
நான் வேறு யாரோ என்று நினைத்தேன்'
என்று சொல்லிப் புன்னகைத்தேன்;

'ஏன், நானாக இருக்கக் கூடாதா?
என்னிடம் பேச மாட்டீர்களா?'
என்று கேட்டுச் சிரித்தாள்;

'சேச்சே, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.
உன்னிடம் பேசுவதற்கு என்ன.
பேச்சுத் துணைக்கு நீ வருகிறாயென்றால்
ஒரு காதம் என்ன,
ஒன்பது காதம் கூட நடப்பேன்'
என்று சொல்லிச் சிரித்தேன்;

'பரவாயில்லையே. நாலு வார்த்தை பேசினாலும்
நன்றாகத்தான் பேசுகிறீர்கள்;
தனியாய் உம்மென்று வந்ததைப் பார்த்தால்
எங்கே, பேச மாட்டீர்களோ
என்று நினைத்தேன்' என்றாள்;

'ஏய் பெண்ணே, நான்
தனியே பேசிக் கொண்டும்
சிரித்துக் கொண்டும் வந்திருந்தால்
என்னிடம் பேச்சுக் கொடுத்திருப்பாயா?
ஒதுங்கி ஓரமாய்ப் போயிருக்க மாட்டாய்?'
என்றேன்;

கேட்டுக் கலகலவென்று சிரித்தபடி

'சரி சரி. நடங்க
பேசிக் கொண்டே போகலாம்' என்றாள்;
'சரிதான்' என்றபடி நானும்
சிரித்தபடி கூட நடந்தேன்;

குளிர்ந்த காற்று மெதுவாய் வீசியது;
மரங்களில் இலைகள்
சுகமாய் அசைந்தன,
மெல்லமாய் சலசலத்தன,
உரிமையாய் கிண்டல் பேசின,
இறுக்கமில்லாமல் சிரித்தன;

நேரம் போவது தெரியாமல்
போய்க் கொண்டு இருந்த போது
பேச்சை நிறுத்தி, தூரத்தைக் காட்டி
'அங்கே பாருங்கள்' என்றாள் நதிப்பெண்;

ஒரு தடுப்பணையின் சுவர்க்கோடு
மெல்லிருட்டில் மங்கலாய்த் தெரிந்தது;

களகளத்த நதிப்பெண்ணின் சிரிப்பலைகள்
மௌனக் கரையைத் தொட்டன;

'நான் நிற்க வேண்டிய இடம் வந்துவிட்டது,
நீங்கள் தொடர்ந்து செல்லுங்கள்;
உங்களைச் சந்தித்துப் பேசியது
சந்தோஷமான ஒரு அனுபவம்,
மிக்க நன்றி' என்று சொல்லி
நின்றாள் நதிப்பெண்;

'ஆம் நதிப்பெண்ணே, செல்ல வேண்டும்தான்;
உன்னுடன் நான் நடந்த தூரம்
கொஞ்சம்தான் என்றாலும் - அதில்
எனக்குக் கிடைத்த சந்தோஷ மணிகள் அதிகம்,
என்றும் அவை என்னோடு இருக்கும்,
நன்றி, வருகிறேன்'
என்று சொன்ன போது
குரல் ஏனோ கரகரத்தது;

'இனிதே தொடங்கி விட்டது'
என்றபடி மெதுவாய் நகர்ந்தேன்;

தூரத்து வானில் கிளிக்கூட்டம் ஒன்று
வீடு திரும்பிக் கொண்டிருந்தது...

அ. சோ
பெங்களூர்
24 பிப்ரவரி 2017.